விவசாயத்தை வீழ்த்திய தொழிற்சாலைகள்!

First Published : 07 Feb 2011 12:00:00 AM IST



கடலூர் உப்பனாற்றங் கரையில் இயற்கை எழிலையும் விவசாயிகளின் வாழ்வாதாரத்தையும் அழித்துவிட்டு, அதில் தலைநிமிர்ந்து நிற்கும் சில ரசாயன ஆலைகள். கடலூர் அருகே

கடலூர், பிப். 6: கிழக்குக் கடற்கரை ஓரமாக கடலூர் வழியாக, பரங்கிப்பேட்டை முதல் ஆந்திர மாநிலம் விசாகப்பட்டினம் வரை நீண்டு கிடப்பது பக்கிம்ஹாம் கால்வாய்.

பக்கிம்ஹாம் கால்வாயின் இருபுறமும் பச்சைப் பசேலென காட்சி தந்த வேளாண் பயிர்கள், உடலுக்கும் மனதுக்கும் இதம் தரும் கண்கொள்ளா காட்சி. வானுயர வளர்ந்து நிற்கும் பனை மரங்கள், மாமரங்கள், தென்னை மரங்கள், ஆயிரக்கணக்கான ஏக்கரில் முந்திரிக் காடுகள், சவுக்குத் தோப்புகள், மணிலா, வெட்டிவேர் வயல்கள், கத்தரி, வெங்காயம் உள்ளிட்ட தோட்டக்கலைப் பயிர்கள் என்று விரிந்து பரந்து கிடந்த நிலப்பரப்பு இன்று, தொழிற்சாலைகளால் ஆக்கிரமிக்கப்பட்டு புகை கக்கிக் கொண்டு இருக்கின்றன.

ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களில் மரங்கள் வெட்டப்பட்டு, சில கட்டடங்கள் தவிர மற்றபடி, பெரும்பகுதி சுடுகாடாய்க் காட்சி அளிக்கின்றன. வேளாண்மையை அழித்தது மட்டுமன்றி, நச்சு வாயுக்களை பெருமளவுக்கு வெளியேற்றி 50-க்கும் மேற்பட்ட கிராமங்களில் மக்களின் சுகாதாரத்தை பாழ்படுத்தி வருகின்றன.

அன்று வெள்ளைக்காரர்களால் எளிமையான நீர்வழிப் போக்குவரத்துக்காக உருவாக்கப்பட்ட பக்கிம்ஹாம் கால்வாய் (உப்பனாறு) இன்று தொழிற்சாலைக் கழிவுகளை வெளியேற்றுவதற்கு தகுதியான இடமென மத்திய, மாநில அரசுகள் வகைப்படுத்தி, அங்கு பன்னாட்டு ரசாயனத் தொழிற்சாலைகளுக்கு அனுமதி அளித்து வருவது, குதிரை குப்புறத் தள்ளியதுமன்றி குழியும் பறித்த கதையாகி விட்டது.

3 ஆயிரம் ஏக்கரில் சிப்காட் ரசாயனத் தொழிற்பேட்டை, 3 ஆயிரம் ஏக்கரில் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை, 1,400 ஏக்கரில் அனல் மின் நிலையம், 1,000 ஏக்கரில் தனியார் கப்பல் கட்டும் தளம், இன்னும் பெயர் வைக்கப்படாத ஆலைகளுக்கும் ஆயிரக்கணக்கான ஏக்கர் விளை நிலங்கள், நல்ல விலை தருவதாகவும், அவர்களின் சந்ததிக்கு வேலை தருவதாகவும், விவசாயிகளிடம் ஆசைகாட்டி பறிக்கப்பட்டுவிட்டன.

விளை நிலங்களை இழந்த, பாதிக்கப்பட்ட கிராமங்களைச் சேர்ந்த இளைஞர்கள், இந்தத் தொழிற்சாலைகளில் நாளொன்றுக்கு ரூ. 60 முதல் ரூ. 80 வரை ஒப்பந்தத் தொழிலாளிகளாக கூலிவேலை பார்க்கும் அவல நிலைக்குத்தான் தள்ளப்பட்டனர். ஆனால் விவசாய நிலங்களை பறித்து அவற்றில் தொடங்கப்பட்ட ஆலைகள், தங்கள் உற்பத்திப் பொருள்களை வெளிநாடுகளில் விற்று, கோடிக்கணக்கான ரூபாய் கொள்ளை லாபம் சம்பாதித்து வருகின்றன.

இவற்றுக்கெல்லாம் முன்னதாக ஆயிரக்கணக்கான ஏக்கர் விளை நிலங்கள் இறால் பண்ணைகளாக மாற்றப்பட்டு, இன்று விதிகளை இறுக்கியதன் காரணமாக, பல இறால் பண்ணைகள் மூடப்பட்டாலும், அவற்றில் மேற்கொண்டு விவசாயம் செய்ய முடியாத பரிதாப நிலைக்கு அந்த நிலங்கள் தள்ளப்பட்டு, சுடுகாடாகக் காட்சி அளிக்கின்றன.

பறிபோனது போக மிச்சம் சொச்சம் இருக்கும் நிலங்களில் இன்றும் பனைமரங்கள், தென்னை மரங்கள், மணிலா, வெட்டிவேர், மலர்ச் செடிகள் பயிரிட்டு நம்பிக்கையுடன் வாழ்க்கை நடத்திக் கொண்டு இருக்கிறார்கள் ஏழை விவசாயிகள்.

தியாகவல்லி, நொச்சிக்காடு, நடுத்திட்டு, ராசாப்பேட்டை உள்ளிட்ட கிராமங்களில், 5 ஆயிரம் ஏக்கரில் பயிரிடப்பட்ட வெட்டிவேர் இன்று, 150 ஏக்கராகச் சுருங்கி விட்டது. ஓராண்டுப் பயிரான வெட்டிவேர் பயிரிடுவதில், ஏக்கருக்கு 4 டன் வெட்டிவேர் கிடைக்கும் என்றும், ஆண்டு வருவாய் ரூ. 2 லட்சம் என்றும் நினைவு கூறுகிறார், தியாகவல்லி விவசாயி சாமிக் கச்சிராயர்.

ஆயிரக்கணக்கான வெட்டிவேர் வயல்களும், சவுக்குத் தோப்புகளும், மணிலா தோட்டங்களும், முந்திரிக் காடுகளும், காய்கறித் தோட்டங்களும் அழிக்கப்பட்டு, அவைகள் நச்சு வாயுக்களை உமிழும் தொழிற்சாலைகளாக மாற்றப்பட்டதுதான் உலகளாவிய புதிய பொருளாதாரக் கொள்கையா என்று வினா எழுப்புகிறார் சாமிக் கச்சிராயர்.

**காய்கறித் தோட்டம் அமைக்க பயிற்சி**

First Published : 07 Feb 2011 02:57:04 AM IST

சென்னை,பிப்.6: காய்கறித் தோட்டம் அமைத்தல் குறித்த பயிற்சி சென்னையில் செவ்வாய்க்கிழமை (பிப்ரவரி 8) நடைபெறவுள்ளது.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் கீழ் இயங்கும் சென்னை நகர்புறத் தோட்டக்கலை வளர்ச்சி மையத்தின் முலம் இந்தப் பயிற்சி வழங்கப்படும். வீட்டில் உள்ள

காலியிடங்களில் பழ மரங்கள், மூலிகைப் பயிர்கள், காய்கறித் தோட்டம் உள்ளிட்டவை அமைக்க இதில் பயிற்சி அளிக்கப்படும்.

வீட்டிலிருப்போர், மாணவர்கள், சுய உதவிக் குழுக்கள் என அனைவரும் இதில் பங்கேற்கலாம்.

கலந்து கொள்ள விரும்புபவர்கள் தங்கள் பெயரை முன்பதிவு செய்து கொள்ள வேண்டும்.

மேலும் விவரங்களுக்கு: 044-2626 3484, 4217 0506.

**மலர் கண்காட்சி**

First Published : 06 Feb 2011 10:41:29 AM IST

விழுப்புரம், பிப். 5: விழுப்புரத்தில் ரம்யா நர்சரி கார்டனில் 4 நாள்கள் நடைபெறும் மலர் கண்காட்சியை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் பொ. பகலவன் தொடங்கி வைத்து பார்வையிட்டார்.

மூலிகை நூலை கோலியனூர் தோட்டக்கலைத் துறை உதவி இயக்குநர் முனைவர் க. வீராசாமி வெளியிட, ஓசோன் பாதுகாப்பு இயக்கத் தலைவர் எம். ராமன் பெற்றுக்கொண்டார். நிகழ்ச்சியில் ராசையன், கதிர்வேல் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

பெங்களூர் ரோஜா, ஜாதிமல்லி, முல்லை அரும்பு, சம்பங்கி, செண்பகம், உலர்ந்த மல்லி, அடுக்குமல்லி, குடைமல்லி, அலரிசம், நைட்குயின், குண்டுமல்லி, பாரிஜாதம், பன்னீர்பூ, பவழமல்லி, ராமர்பாணம், பன்னீர் ரோஜா, நாட்டுரோஜா, சேஞ்சிங்ரோஸ், மனோரஞ்சிதம் உள்ளிட்ட ஏராளமான பூக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தன.

**அரியலூர் மாவட்ட விவசாயிகளுக்கு வேளாண் இயந்திரப் பயிற்சி**

First Published : 06 Feb 2011 12:38:28 PM IST

அரியலூர், பிப். 5: அரியலூர் மாவட்டத்தில் விவசாயிகளுக்கு வேளாண் இயந்திரப் பயிற்சி அளிக்கப்பட உள்ளது.

இதுகுறித்து அரியலூர் வேளாண் பொறியியல் துறை உதவிச் செயற்பொறியாளர் சனிக்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு:

மத்திய அரசின் வேளாண் இயந்திரம் நீர் நிர்வாகப் பயிற்சித் திட்டத்தின் கீழ் வேளாண் இயந்திரமயமாக்கலை செயல்படுத்தவும், சொட்டுநீர், தெளிப்பு நீர் முறை மற்றும் நீர் நிர்வாகம் குறித்து விவசாயிகள் அறிந்து கொள்ளும் வகையில் அவர்களுக்கு வேளாண் இயந்திர பயிற்சி அளிக்கப்பட உள்ளது.

அரியலூரில் உள்ள வேளாண் பொறியியல் துறை உதவிச் செயற்பொறியாளர் அலுவலகத்தில் பிப்ரவரி 14 முதல் 19 ஆம் தேதி வரையிலும், பிப்ரவரி 21 முதல் 28 ஆம் தேதி வரையிலும் இரண்டு கட்டங்களாகப் பயிற்சி அளிக்கப்பட உள்ளது.

அரியலூர் மாவட்டத்திலுள்ள 18 முதல் 40 வயதுக்குள்பட்ட இருபால் விவசாயிகளும் பயிற்சியில் பங்கேற்க தகுதி உடையவர்கள். பயிற்சி குறித்த மேலும் விவரங்களை அரியலூர்-ஜயங்கொண்டம் சாலையிலுள்ள வேளாண் பொறியியல் துறையின் உதவிச் செயற்பொறியாளர் அலுவலகத்தைத் தொடர்பு கொண்டு பெறலாம்.

இந்தப் பயிற்சியில் சேர விரும்புபவர்கள் பிப்ரவரி 12 ஆம் தேதி மாலை 5 மணிக்குள் தங்களது பெயரை மேற்கண்ட அலுவலகத்தில் பதிவு செய்து கொள்ள வேண்டும் என்றார் அவர்.

**தோட்டக்கலை கருத்தரங்கம்**

First Published : 06 Feb 2011 02:53:14 PM IST

கன்னியாகுமரி, பிப். 5: அகஸ்தீஸ்வரம் வட்டார தோட்டக்கலை சார்பாக கருத்தரங்கு மற்றும் பயிற்சி முகாம் கன்னியாகுமரியில் நடைபெற்றது.

அகஸ்தீஸ்வரம் ஊராட்சி ஒன்றியத் தலைவர் எம். சோமு தலைமை வகித்தார். மாவட்ட தோட்டக்கலை துணை இயக்குநர் மரியஜோசப்ராஜ் முன்னிலை வகித்தார். தோட்டக்கலை அலுவலர் ஆல்பர்ட் ராபின்சன் வரவேற்றார்.தோட்டக்கலை உதவி இயக்குநர்கள் டி.சி. கண்ணன், சுசீலா ஆகியோர் பேசினர்.கூட்டத்தில் உள்ளாட்சிப் பிரதிநிதிகள், விவசாயிகள் திரளாகப் பங்கேற்றனர். உதவி வேளாண்மை அலுவலர் நாகமணி நன்றி கூறினார்.

**"ராஜராஜன்' நெல் சாகுபடி பரப்பளவை இருமடங்காக அதிகரிக்கத் திட்டம்**

First Published : 06 Feb 2011 11:40:05 AM IST

மதுரை, பிப்.5: மதுரை மாவட்டத்தில் அடுத்தாண்டில் ராஜராஜன் 1000 நெல் சாகுபடி பரப்பளவை இருமடங்காக அதிகரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது என்று மதுரை மாவட்ட ஆட்சியர் சி.காமராஜ் தெரிவித்தார்.

மதுரை மாவட்டம், பொருசுபட்டி கிராமத்தில் ராஜராஜன் 1000 நெல் நடவுப் பணியை ஆட்சியர் 1.11.2010-ல் தொடங்கிவைத்தார். அதன் அறுவடை சனிக்கிழமை நடைபெற்றது.

அறுவடைப் பணியை கதிர் அறுக்கும் இயந்திரம் மூலம் ஆட்சியர் தொடங்கிவைத்தார். பின்னர், விவசாயிகள் 25 பேருக்கு உரம், கைத்தெளிப்பான், நிதியுதவி உள்ளிட்ட பல்வேறு நலத்திட்ட உதவிகளை அவர் வழங்கிப் பேசியது:

மதுரை மாவட்டத்தில் சராசரியாக 60 ஆயிரம் ஹெக்டேர் பரப்பளவில் நெல் சாகுபடி செய்யப்படுகிறது. இந்த ஆண்டு இதுவரை 57,440 ஹெக்டேர் பரப்பில்
நெல் சாகுபடி செய்யப்பட்டது. இதில், ராஜராஜன் 1000 நெல் சாகுபடி தொழில்நுட்ப முறையில் 26 ஆயிரம் ஹெக்டேர் இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டு 25,984 ஹெக்டேர் பரப்பில் இலக்கு எட்டப்பட்டுள்ளது.

இந்த ராஜராஜன் 1000 தொழில்நுட்ப முறையில் இயந்திர நடவு முறை மற்றும் களை எடுப்பு வசதிகள் இருப்பதாலும், நீர் நிர்வாகம் செய்யப்படுவதால் சாதாரண முறையில் நடவு செய்து கிடைக்கும் நெல் மகசூலைவிட அதிகமாகக் கிடைக்கிறது.

மதுரை மாவட்டத்தில் சராசரியாக சாதாரண நெல் நடவு முறையில் ஒரு ஹெக்டேருக்கு 4 முதல் 5 மெட்ரிக் டன்கள் மட்டுமே நெல் மகசூல் கிடைக்கிறது. ஆனால், இந்த நெல் சாகுபடி முறையைக் கடைப்பிடித்து விவசாயிகள் 7 முதல் 9 மெட்ரிக் டன் வரை மகசூல் பெறுகின்றனர். இங்குள்ள வயலில் 8.5 மெட்ரிக் டன் நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

ஆகவே, விவசாயிகள் இந்த முறையைப் பயன்படுத்தி அதிக மகசூல் பெற வேண்டும். வரும் ஆண்டில் ராஜராஜன் நெல் சாகுபடி பரப்பளவை மதுரை மாவட்டத்தில் இருமடங்காக அதிகரிக்க உரிய நடவடிக்கை எடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது என்றார்.

விழாவில், வேளாண் இணை இயக்குநர் சங்கரலிங்கம், துணை இயக்குநர் சம்பத்குமார், பொருசுபட்டி ஊராட்சித் தலைவர் கே.பி.மதுரைச்சாமி, மதுரை மாவட்ட செய்தி, மக்கள் தொடர்பு அலுவலர் இரா.அண்ணா உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

ஆட்சியருக்குப் பாராட்டு: ராஜராஜன் 1000 நெல் சாகுபடித் திட்டத்தைத் செயல்படுத்தியதற்காக ஆட்சியருக்கு பொருசுபட்டி கிராம மக்கள் பாராட்டுத் தெரிவித்தனர். இதுகுறித்து அக்கிராமத்தைச் சேர்ந்த கே.பி.கோவிந்தசாமி, அய்யணன்ராஜ் ஆகியோர் பழைய விவசாய முறையைக் கடைப்பிடித்து வந்தபோது, மகசூல் கிடைத்ததைவிட தற்போதைய ராஜராஜன் 1000 சாகுபடி முறையில் மகசூல் ஒரு மடங்கு அதிகரித்துள்ளது.

எலித் தொல்லைக்காக கட்டுப்படுத்த ஆகும் செலவு முற்றிலும் குறைந்துள்ளது. புதிய முறையில் சாகுபடி செய்ய நினைத்தபோது தொடக்கத்தில் தயங்கினோம். ஆட்சியரே வந்து நிலத்தில் நடவு இயந்திரத்தை இயக்கி ஊக்குவித்ததால் துணிந்து செய்தோம். தற்போது நெல் மகசூல் அதிகரித்துள்ளது. இதனால், தொடர்ந்து இந்த முறையில் சாகுபடி செய்ய உள்ளோம். இதற்காக ஆட்சியருக்குப் பாராட்டைத் தெரிவித்துக் கொள்கிறோம் என்றனர்.

இந்நிகழ்ச்சிக்குப் பிறகு, மேலூர் தாலுகா கொட்டாம்பட்டி வட்டாரத்தில் உள்ள சேக்கிப்பட்டி நீர்வடிப் பகுதியில் இந்திய வேளாண் வளர்ச்சி அறக்கட்டளை தன்னார்வு தொண்டு நிறுவனத்தின் மூலம் கிராம நீர்வடிப்பகுதிக் குழு அமைக்கப்பட்டு 1000 ஹெக்டேர் பரப்பளவு தரிசு மற்றும் மானாவாரி நிலங்களை மேம்படுத்தும் திட்டத்தை ஆட்சியர் பார்வையிட்டார்.

சேக்கிப்பட்டி கிராமத்தில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையம், தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கி, ஊராட்சி திருமண மண்டபம் உள்ளிட்ட இடங்களிலும் அவர் ஆய்வு மேற்கொண்டார.

**இலங்கையில் கனமழை, வெள்ளம்: 10 லட்சம் பேர் பாதிப்பு**

First Published : 06 Feb 2011 03:12:15 AM IST

கொழும்பு, பிப்.5: இலங்கையின் கிழக்கு, வடக்கு, வட மத்தியப் பகுதிகளில் வெள்ளிக்கிழமை இரவு பெய்த கன மழையால் ஏற்பட்ட திடீர் வெள்ளப்பெருக்கு பலத்த சேதத்தை ஏற்படுத்தியுள்ளது.

மழை, வெள்ளம் காரணமாக 7 பேர் உயிரிழந்துள்ளனர், 2 பேரைக் காணவில்லை.

பத்து லட்சத்துக்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் 2,95,156 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள். 7,700 வீடுகள் முழுமையாகவும், ஓரளவுக்கும் சேதம் அடைந்தன.

இத் தகவலை பேரிடர் மேலாண்மை மையத்தைச் சேர்ந்த பார்த்திப கோடிப்பிள்ளை தெரிவிக்கிறார்.

ஒரு மாதத்துக்குள்: கடந்த ஜனவரி மாதம்தான் இலங்கையைக் கடும் மழையும் வெள்ளமும் பாடாய்படுத்திவிட்டு ஓய்ந்தன. அப்போது நடந்த சம்பவங்களில் 43 பேர் இறந்தனர்.

3 லட்சம் பேர் வீடுகளை இழந்தனர். அப்போதும் 10 லட்சத்துக்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டனர்.

இலங்கை அரசுக்கும், பிரிவினை கோருகிறவர்களுக்கும் இடையில் கடந்த சில ஆண்டுகளில் நடந்த மோதல்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இந்த பாதிப்பும் சேர்ந்துகொள்ள துயரம் அதிகரித்துள்ளது.

மீட்பு நிவாரண உதவிகளைத் தீவிரப்படுத்த முடியாதபடிக்கு அடுத்த 24 மணி நேரத்துக்கு மழை மேலும் தீவிரமாகும் என்று இலங்கை வானிலைத் துறை அதிகாரி மெரில் மெண்டிஸ் எச்சரித்துள்ளார்.

தினமலர்

**பூண்டி ஏரி நீர்மட்டம் குறைகிறது**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 07,2011,00:54 IST

எம்.யுவராஜ்/ஊத்துக்கோட்டை : கண்டலேறு அணையில் இருந்து வந்து கொண்டிருந்த கிருஷ்ணா நீர் நிறுத்தப்பட்ட நிலையில், புழலேரிக்கு தண்ணீர் தொடர்ந்து செல்வதால் பூண்டி ஏரியின் நீர்மட்டம் குறையத் துவங்கியுள்ளது.கிருஷ்ணா நீர் மற்றும் மழைநீரால் ஏரியின் நீர் மட்டம் உயர்ந்து கடந்தாண்டு டிசம்பர் 16ம் தேதி முழு கொள்ளளவான 35 அடியை எட்டியது.கண்டலேறு அணையில் இருந்து வந்து கொண்டிருந்த கிருஷ்ணா நீர் நிறுத்தப்பட்ட நிலையிலும், நீர்ப்பிடிப்பு பகுதிகளில் இருந்து தண்ணீர் வந்து கொண்டிருந்ததால் ஏரி முழுவதும் நிரம்பி கடல் போல் காட்சியளிக்கிறது.தற்போது கிருஷ்ணா நீர் மற்றும் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் இருந்து நீர்வரத்து நின்று போனதாலும், சென்னை ஏரிகளுக்கு இங்கிருந்து தண்ணீர் திறந்துவிடப்படுவதால், ஏரியின் நீர்மட்டம் குறையத் துவங்கியுள்ளது.

சாய்கங்கா கால்வாய் வழியாக தமிழகத்திற்கு இதுவரை 4.663 டி.எம்.சி., கிருஷ்ணா நீர் வந்துள்ளதாக மாநில பொதுப்பணித் துறை அதிகாரிகள் தெரிவித்தனர். நேற்று காலை 6 மணி நிலவரப்படி பூண்டி ஏரியில் 2986 மில்லியன் கன அடி நீர் உள்ளது. நீர் மட்டம் 34.51 அடி. இங்குள்ள "லிங்க்' கால்வாய் மூலம் வினாடிக்கு 190 கன அடி வீதம் தண்ணீர் திறந்து விடப்பட்டு புழலேரிக்கு செல்கிறது."பேபி' கால்வாய் மூலம் வினாடிக்கு 10 கன அடி வீதம் திறந்து விடப்பட்ட நீர் அங்குள்ள நீரேற்று நிலையம் வழியாக சென் னை சுத்திகரிப்பு நிலையத்துக்கு அனுப்பி வினியோகம் செய்யப்படுகிறது.

**ஈரோட்டில் மீன்விற்பனை ஜோர்**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 07,2011,01:26 IST

ஈரோடு: காய்கறி விலை உயர்வால், ஈரோட்டில் மீன் விற்பனை சூடு பிடித்துள்ளது.ஈரோட்டில் சூரம்பட்டி, கருங்கல்பாளையம் ஆகிய இடங்களில் பெரிய மீன் மார்க்கெட் உள்ளது. மாநகர்

முழுவதும் உள்ள மீன் கடைகளில் 500க்கும் மேற்பட்ட வியாபாரிகள் உள்ளனர்.கேரளா, ஆந்திர மாநிலம் மற்றும் நாகபட்டினம், ராமேஸ்வரம், தூத்துக்குடி பகுதியில் இருந்து கடல் மீன்களும், மேட்டூர், பள்ளிபாளையம், கொடுமுடி ஆகிய பகுதியில் இருந்து ஆற்று மீன்களும் ஈரோடு மீன் மார்க்கெட்டுக்கு வருகிறது. தினமும் ஐந்து டன் மீன்கள் விற்பனைக்கு வருகிறது.
ஞாயிற்றுக்கிழமை மட்டும் 25 முதல் 30 டன் வரை மீன்கள் விற்பனையாகிறது. காய்கறி விலை உயர்வால், மக்கள் மீன்களை வாங்கி செல்கின்றனர். மீன் கிலோ 10 முதல் 50 ரூபாய் வரை உயர்ந்துள்ளது. ரோகு, கட்லா 80 ரூபாய், ஜிலேபி 60 முதல் 80 ரூபாய், கெழுத்தி 80 ரூபாய், இறால், வஞ்ஜிரம் 250ல் முதல் 300 வரையும், கண்ணாடி பாறை 120 ரூபாய், முரள் மீன் 150 ரூபாய் மற்றும் நண்டு கிலோ 150 ரூபாய்க்கும் விற்கப்பட்டது.

**மஞ்சள் விலை மீண்டும் உயர்வுகிராமங்களில் அறுவடை தீவிரம்**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 07,2011,01:12 IST

மேட்டூர்: கடந்த மாதம் குறைந்திருந்த மஞ்சள் விலை மீண்டும் உயர்ந்துள்ளதால், கிராமங்களில் மஞ்சள் அறுவடை தீவிரமடைந்துள்ளது.ஈரோடு, சேலம் சந்தையில் சில மாதங்களுக்கு முன் மஞ்சள் ஒரு குவிண்டால், 15 ஆயிரம் ரூபாய்க்கு மேல் விற்பனையானது. அதன் பின், படிப்படியாக சரிந்தது. ஒரு மாதத்துக்கு முன், ஒரு குவிண்டால், 6,000 ரூபாயாக சரிந்தது. அதனால், மஞ்சள் விவசாயிகள் விரக்தியடைந்தனர். பெரும்பாலான விவசாயிகள் மஞ்சளை அறுவடை செய்து விற்பனை செய்யாமல், வீடுகளில் இருப்பு வைத்தனர்.

அதேநேரம் சந்தைக்கு மஞ்சள் வரத்து குறைந்ததால் விலை படிப்படியாக அதிகரித்தது.கடந்த இரு நாட்களாக தரத்தை பொறுத்து மஞ்சள் குவிண்டால், 9,000 முதல் 10 ஆயிரத்து 500 வரை கொள்முதல் செய்யப்படுகிறது. கொளத்தூர் ஒன்றியத்தில் மூலக்கடை, கண்ணாமூச்சி, தண்டா, தார்க்காடு, நீதிபுரம் பகுதியில் விவசாயிகள் மஞ்சள் அதிக அளவில் சாகுபடி செய்தனர்.தற்போது, விலை உயர்ந்துள்ளதால் கொளத்தூர் பகுதியில் விவசாயிகள் அவசர கதியில் மஞ்சள் அறுவடை செய்து, வேக வைத்து உலர வைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர். ஏராளமான விவசாயிகள் மஞ்சள் அறுவடை செய்வதால், கொளத்தூர் பகுதியில் மஞ்சள் வேக வைக்கும் இயந்திரத்துக்கு கிராக்கி ஏற்பட்டுள்ளது.அதனால், இரவில் கூட மஞ்சளை விவசாயிகள் வேக வைக்கின்றனர்.

**பால் விலை உயர்வு கோரி உற்பத்தி நிறுத்தம்**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 07,2011,00:56 IST

கோவை: பாலுக்கு அதிக விலை உயர்வு, சங்கப் பணியாளர்களுக்கு பணி நிரந்தரம் ஆகிய கோரிக்கைகளை நிறைவேற்ற வலியுறுத்தி, இன்று முதல் பால் உற்பத்தி மற்றும் விற்பனை நிறுத்தப் போராட்டத்தில் விவசாயிகள் ஈடுபடுகின்றனர். இதன் முன்னோட்டமாக, நேற்று கோவை செஞ்சிலுவை சங்கம் முன் விவசாயிகள் ஆர்ப்பாட்டம் நடத்தினர். போராட்டம் குறித்து கட்சி சார்பற்ற தமிழக விவசாயிகள் சங்கத்தின் தலைவர் பழனிசாமி கூறியதாவது: பாட்டிலில் அடைத்து விற்கும் தண்ணீரின் விலை குறித்து கவலைப்படாமல் வாங்கி குடிப்பவர்கள், பால் விலை உயர்ந்தால் கூச்சல் போடுகின்றனர். பாலுக்கு அரசு லிட்டருக்கு ஒரு ரூபாய் உயர்த்தினால் கலப்புத்தீவனம் தயாரிப்பாளர்கள் மூட்டைக்கு 100 ரூபாய் உயர்த்துகின்றனர். இதனால், கடந்த நான்கு ஆண்டுகளில் கலப்பு தீவனம் விலை கிலோவுக்கு ஐந்து ரூபாய் உயர்ந்துள்ளது. ஆனால் அந்தளவுக்கு பால் விலை உயரவில்லை. ஆவினுக்கு பால் வரத்து குறைந்து ஆவின் கூட்டுறவு நிறுவனங்கள் மூடப்பட்டு வருகின்றன. பணிபுரியும் ஊழியர்கள் சிரமப்படுகின்றனர். கிராம பால் கொள்முதல் சங்கங்கள் நலிவடையாமல் இருந்தால், ஆவின் நிறுவனத்துக்கு போதுமான பால் வரத்து இருக்கும். கிராம பால் கொள்முதல் நிலையங்களை அழிவில் இருந்து காப்பாற்ற வேண்டும். ஆவினை காப்பாற்றினால் நுகர்வோருக்கு தரமான பால் கிடைக்கும்.

மாட்டுப் பாலுக்கு லிட்டருக்கு ஐந்து ரூபாயும், எருமைப்பாலுக்கு எட்டு ரூபாயும் உயர்த்தி வழங்க வேண்டும். பாலுக்கு அதிக விலை உயர்வு, சங்கப் பணியாளர்களுக்கு பணி நிரந்தரம் ஆகிய கோரிக்கைகளை நிறைவேற்ற வலியுறுத்தி, இன்று முதல் பால் உற்பத்தி மற்றும் விற்பனை நிறுத்தப் போராட்டத்தில் விவசாயிகள் ஈடுபடுகின்றனர்.கோரிக்கைகளை அரசு நிறைவேற்றும் வரை போராட்டம் தொடரும். இக்கோரிக்கைகளை ஏற்கும் கட்சிக்கு சட்டசபை தேர்தலில் ஓட்டு அளிக்க முடிவு செய்துள்ளோம். இவ்வாறு, பழனிசாமி கூறினார்.

**"இறங்கி வருது' வெங்காயம்! உழவர் சந்தையில் குவிந்தனர் மக்கள்**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 07,2011,00:13 IST

குறிச்சி: சுந்தராபுரம் உழவர் சந்தையில் பெரிய வெங்காயம் உள்ளிட்ட காய்கறிகளின் விலை குறைந்தது; நேற்று மட்டும் 27.5 "டன்' காய்கறிகள் விற்பனையானது. சில மாதங்களாக பெரிய வெங்காயம் மற்றும் சிறிய வெங்காயத்தின் விலை மிகவும் அதிகரித்தது. இவற்றை வாங்குவதையே தவிர்க்கும் நிலைக்கு மக்கள் தள்ளப்பட்டனர். இந்நிலையில், கடந்த இரு வாரங்களாக வெங்காய வகைகளின் விலை குறையத் துவங்கியது.

நேற்று, சுந்தராபுரம் உழவர் சந்தையில் பெரிய வெங்காயம் கிலோ 18 முதல் 20 ரூபாய்க்கும், சிறிய வெங்காயம் 32 முதல் 38 ரூபாய்க்கும், நாட்டுத் தக்காளி மற்றும் ஆப்பிள் தக்காளி கிலோ

ஆறு முதல் எட்டு ரூபாய்க்கும் விற்றது. நாட்டுக் கத்தரிக்காய் கிலோ 18 முதல் 20 ரூபாய்க்கும், பாகற்காய் மற்றும் புடலங்காய் கிலோ 12 ரூபாய்க்கும், பீர்க்கங்காய் 15 ரூபாய்க்கும், அரசாணிக்காய் எட்டு ரூபாய்க்கும், பூசணிக்காய் 10 முதல் 12 ரூபாய்க்கும், பச்சை மிளகாய் (சம்பா) 16 முதல் 18 ரூபாய்க்கும் விற்கப்பட்டன. பச்சை மிளகாய் குண்டு) கிலோ 22 முதல் 24 ரூபாய்க்கும், அவரைக்காய் 20 ரூபாய்க்கும், சேனைக் கிழங்கு 16 முதல் 18 ரூபாய்க்கும், உருளைக்கிழங்கு கிலோ 18 ரூபாய்க்கும், ஊட்டி உருளைக்கிழங்கு கிலோ 22 ரூபாய்க்கும், கேரட் 24 முதல் 32 ரூபாய்க்கும், புஷ் பீன்ஸ் 26 முதல் 28 ரூபாய்க்கும் விற்கப்பட்டது.

முட்டைகோஸ் மற்றும் சிவப்பு முள்ளங்கி 14 ரூபாய்க்கும், வெள்ளை முள்ளங்கி 10 ரூபாய்க்கும், நூல் கோல் மற்றும் டர்னிப் 16 முதல் 18 ரூபாய்க்கும், சுரைக்காய் 10 முதல் 12 ரூபாய்க்கும், மேராக்காய் 14 முதல் 16 ரூபாய்க்கும், நேந்திரன் பழம் 18 முதல் 22 ரூபாய்க்கும், ஒரு தேங்காய் எட்டு முதல் 13 ரூபாய்க்கும் விற்கப்பட்டன. காய்கறிகள் விலை குறைந்ததையடுத்து, நேற்று சுந்தராபுரம் உழவர் சந்தையில் பொதுமக்கள் பெருமளவில் குவிந்தனர். இங்கு, சராசரியாக நாளொன்று 20 - 22 டன்காய்கறி விற்பனையாகும். நேற்று 27.5 டன் காய்கறி விற்பனையானது.

"கைப்பிடி எங்கய்யா...?'

கோவை:தாழ்தள சொகுசு பஸ்சில் கைப்பிடி இல்லாததால், பயணிகள் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். அரசு போக்குவரத்துக்கழகத்துக்குச் சொந்தமான தாழ்தள சொகுசு பஸ் (பதிவு எண்: டி.என் 38 என் 2182) கணுவாயிலிருந்து கோவை ரயில்வே ஸ்டேஷன் நோக்கி வந்தது. இந்த பஸ்சின் உட்புறக்கூரையின் கீழ் பயணிகள் பிடித்து நிற்பதற்கான கைப்பிடிகள் மாயமாகியிருந்தன. வெங்கிட்டாபுரம் பகுதியில் டிரைவர் திடீர் "பிரேக்' போட்டபோது, பயணிகள் ஒருவர் மீது ஒருவர் விழுந்தனர்; கைப்பிடிகள் போதிய அளவில் இல்லாததே இதற்குகாரணம். அடுத்தடுத்து, இதே போன்று டிரைவர் பிரேக் போடுவதும், பயணிகள் விழுவதுமாக நிலைமை தொடர்ந்தது. இதனால், கடுப்படைந்த பயணிகள் டிரைவர், கண்டக்டருடன் வாக்குவாதம் செய்தனர்; பஸ் நிறுத்தப்பட்டது. அவ்வழியாக வந்த வாகனங்களும் செல்ல வழியின்றி நடுரோட்டில் நிறுத்தப்பட்டன. அதன்பின், பயணிகளை சமாதானம் செய்த பஸ் ஊழியர்கள், பஸ்சை கிளப்பிச் சென்றனர். மற்ற சாதாரண பஸ்களை காட்டிலும் சொகுசு பஸ்களில் அதிக கட்டணம் வசூலிக்கப்படுகிறது. அவ்வாறிருந்தும் பயணிகளுக்கான "கைப்பிடி'வசதியைக்கூட, போக்குவரத்துக்கழகம் பொருத்தாதது பயணிகளை அதிருப்தியடையச் செய்துள்ளது. அதிக கட்டணம் வசூலித்து வருவாய் ஈட்டும் அரசு போக்குவரத்துக்கழகம், பயணிகளுக்கான வசதிகளை ஏற்படுத்தி தருவது அவசியம்.

**விவசாயிகளுக்கு நஷ்ட ஈடு சங்கக் கூட்டத்தில் வலியுறுத்தல்**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 07,2011,00:21 IST

பொள்ளாச்சி: "விவசாயத் தொழிலில் எதிர்பாராமல் ஏற்படும் விபத்துகளில் பாதிக்கப்படும் தொழிலாளர்களுக்கு, அரசு நஷ்டஈடு வழங்க வேண்டும்' என, தமிழக விவசாயிகள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.பொள்ளாச்சியில், தமிழக விவசாயிகள் சங்கக் கூட்டம் நடந்தது. அமைப்பாளர் கந்தவடிவேலு வரவேற்றார். நிலத்தடி நீர் எடுத்து தொழிற்சாலைகள் அமைக்கும் முன், குறிப்பிட்ட பகுதி விவசாயிகளிடமும், பொதுமக்களிடமும் ஆலோசித்து, அரசு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும். இதுகுறித்து, மாவட்ட, மாநில அதிகாரிகள் முடிவு செய்ய வேண்டும்; விவசாய நிலங்களில் தொழிலாளர்கள் பணிபுரியும் போது, மின்சாரத்திலோ, தென்னை, பனை மரங்கள் ஏறும் போதும், கிணறு வெட்டும் போதும், எதிர்பாராமல், உடல் உறுப்புகள் பாதிக்கப்பட்டாலோ, உயிரிழப்பு ஏற்பட்டாலோ, விவசாயத் தொழிலாளிகளுக்கு நஷ்ட ஈடு வழங்க வேண்டும்; விவசாயிகளின் நலனுக்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பன உட்பட பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. தலைவர் சுப்ரமணியம் தலைமை வகித்தார். பொருளாளர் ராமசாமி முன்னிலை வகித்தார். தாலுகா செயலாளர் முத்துசாமி நன்றி கூறினார்.

**விதையின் தரம் எப்படி? உறுதிப்படுத்த அறிவுரை**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 07,2011,00:08 IST

கோவை: "இருப்பு வைத்துள்ள விதைகளின் தரத்தை சோதனை முறையில் விவசாயிகள் உறுதிப்படுத்திக் கொள்ளலாம்' என, கோவை விதை பரிசோதனை நிலையம் தெரிவித்துள்ளது.விதை பரிசோதனை அலுவலர் ஜவகர் அறிக்கை:தரமான விதை மட்டுமே நல்ல உற்பத்திக்கு ஆதாரம். விதையின் தரம் என்பது முளைப்புத்திறன், புறத்தூய்மை, பிற ரக கலப்பு மற்றும் ஈரப்பதம் போன்றவற்றை குறிக்கும். தர நிர்ணயங்கள் பயிருக்கு ஏற்ப மாறுபடும். நல்ல முளைப்புத்திறன் கொண்ட விதைகளை விதைப்பதால் விதைச் செலவும் குறையும். புறத்தூய்மை பரிசோதனையில் பிற பயிர் விதை, களை விதை போன்ற கலப்புகள் உள்ளனவா என கண்டறிவதால் விதையின் இனம் மற்றும் புறத்தூய்மை பாதுகாக்கப்படுகிறது.

விதைகளின் முளைப்பு திறனை காக்க ஈரப்பதம் குறித்த விதை பரிசோதனை செய்வது அவசியம். விற்பனையாளர்களும், விவசாயிகளும் தாங்கள் இருப்பு வைத்துள்ள விதைகளின் தரம் அறிய, விதை மாதிரிகளுடன் கடிதம் அனுப்ப வேண்டும். இத்துடன் பரிசோதனை கட்டணமாக ஒரு மாதிரிக்கு ரூ.30 வீதம் செலுத்தப்பட வேண்டும். விதை பரிசோதனை அலுவலர், விதை பரிசோதனை நிலையம், தடாகம் ரோடு, கோவை-13 என்ற முகவரிக்கு விதையுடன் கடிதம்

அனுப்ப வேண்டும். விதை பரிசோதனை முடிவுகள், விண்ணப்பித்த 30 நாட்களுக்குள் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படும்.இவ்வாறு, ஜவகர் தெரிவித்துள்ளார்.

**வரத்து குறைவு; விலை அதிகம் "தர்ப்பூசணி சீஸன்' திருச்சியில் துவக்கம்**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 07,2011,00:03 IST

திருச்சி: கோடை வெயிலின் தாக்கத்தையும், தாகத்தையும் தணிக்கும் தர்பூசணி பழம் "சீஸன்' துவங்கி உள்ளது. வரத்துக்குறைவால் கிலோ 20 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. கோடை காலத்தில் வெயிலின் தாக்கத்திலிருந்து தப்பிக்க, தாகத்தை தணிக்க மக்கள் பல்வேறு யுக்திகளை கையாள்வர். இளநீர், பதநீர், நுங்கு, தர்பூசணி, வெள்ளரி மற்றும் குளிர்பானங்கள் அருந்துவர். இதில், தர்பூசணி மட்டுமே ஓரளவு குறைந்த விலையில் ஏழை, எளிய மக்கள் வாங்கி நுகரும் விலையில் கிடைக்கும்.

தற்போது, தர்பூசணி பழம் "சீஸன்' துவங்கி உள்ளது. திண்டிவனம், விழுப்புரம் ஆகிய பகுதிகளில் அதிகளவு உற்பத்தி செய்யப்படும் இந்த தர்பூசணி மாநிலத்தின் அனைத்து பகுதிகளுக்கும் கொண்டு சென்று விற்கப்படும். திருச்சிக்கு தற்போது, தர்பூசணி பழம் வரத்துவங்கி உள்ளது. அங்கொன்றும், இங்கொன்றுமாக சாலையோரங்களில் தர்பூசணி கடை முளைக்கத் துவங்கி உள்ளன. திருச்சி, தேசிய கல்லூரி செல்லும் வழியில் தர்பூசணி பழம் விற்பனை செய்யும் வியாபாரி ஒருவர் கூறுகையில், ""தர்பூசணி பழம் வரத்துக் குறைவாக உள்ளதால் விலை உச்சத்தில் உள்ளது. கிலோ கணக்கில் தான் எடை போட்டு பழங்கள் தருகின்றனர். அதனால் ஒரு பழம் 100 முதல் 150 ரூபாய் வரை மொத்த விலையில் விற்கப்படுகிறது. சில்லறை விலையில் ஒரு கிலோ 15 முதல் 20 ரூபாய் வரை நாங்கள் விற்பனை செய்கிறோம். "சீஸன்' சூடுபிடித்தால் பழத்தின் வரத்து அதிகரித்து விலை குறையும்,'' என்றார்.

**மூங்கில் சாகுபடி செய்து அதிக லாபம் பெறலாம் : விவசாயிகள் பயன்பெற தோட்டக்கலைத்துறை அழைப்பு**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 07,2011,00:04 IST

தா.பேட்டை: "தா.பேட்டை வட்டார விவசாயிகள் மூங்கில் சாகுபடி செய்து அதிக லாபம் பெறலாம்' என தோட்டக்கலை துறை உதவி அலுவலர் முருகன் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்ட அறிக்கையில் உள்ளதாவது: நமது நாட்டின் பொருளாதாரத்தில் மூங்கில் பெரும் பங்கு வகிக்கிறது. மனிதனின் அன்றாட தேவைக்கு மூங்கில் இன்றியமையாத பொருளாக பயன்பட்டு வருகிறது. கைவினை பொருட்கள் செய்யவும், கிராமிய தொழிற்சாலைகள் மற்றும் காகித ஆலைகளுக்கும் மூங்கில் ஏற்ற மூலப்பொருளாகும். தொழிற்சாலையிலிருந்து வெளிவரும் கழிவுநீரில் மூங்கிலை பயிர் செய்யலாம். சாயப்பட்டறையிலிருந்து வெளியேறும் கழி வு நீரினால் நிலத்தடிநீரின் தன்மை மாற்றுவதுடன் மேல்மட்ட மண்ணும் எந்த பயிரும் செய்ய உகந்ததற்காக மாறிவிடுகிறது. அந்த இடத்தில் மூங்கில் சாகுபடி செய்தால் சாயக்கழிவு நீரை மூங்கில் பயிர் முற்றிலும் எடுத்துக் கொண்டு நிலத்தடிநீரை பாதுகாக்கிறது. இதற்கு செலவு மிகவும் குறைவு என்பதுடன் நல்ல வருவாயையும் ஈட்டி தருகிறது.

பொதுவாக மூங்கில் நன்கு வளர்ந்து நல்ல மகசூலை கொடுக்க மண் வளம் நிறைந்ததாகவும், அதிக அங்கக சத்துக்கள் நிறைந்ததாகவும் இருக்க வேண்டும். மூங்கில் பயிரிட வண்டல் மண் படுகை நிலங்கள், சரளை ம ண், கண் வாய் கரைமண், ஓடை மண், வண்டல் கலந்த களிமண் மற்றும் மணற்பாங்கான நிலங்களில் நன்கு வளரக்கூடியது. நிலத்தை நன்றாக உழுது நாற்று நட 1மீ*மீ*மீ அளவுள்ள குழிகளும், 5மீக்கு5மீ இடைவெளியில் ஒரு குழிக்கு பத்து கிலோ தொழுஉரம், ஐம்பது கிலோ பாஸ்போ பாக்டீரியா, வேம் ஐம்பது கிலோ, அசோஸ்ஸ்பைரில்லம் 25 கிலோ, டி.ஏ.பி 50 கிலோ இட வேண்டும்.

மூங்கில் பயிரை முதலாம் ஆண்டிலிருந்தே பராமரிக்க வேண்டும். தூர் பராமரிப்பதினால் கழிகள் நேராக வளர்ந்து அதிக லாபம் தரும். பக்க கிளைகள் மற்றும் நேராக வளராத கிளைகளை அகற்ற வேண்டும். மண் அரிப்பு ஏற்படும் பகுதிகளிலும், தூர்களிலும் மண் அணைத்தால் அதிக கழிகள் உண்டாகும். நட்ட வடிவிலோ அல்லது "வி' வடிவிலோ வெட்ட வேண்டும். இவ்வாறு வெட்டுவதால் சேதாரம் குறையும். ஒவ்வொரு அறுவடைக்கு பிறகும் தூர் ஒன்றுக்கு மக்கிய தொழுஉரம் 20 இடுதல் அவசியம். ஒரு ஹெக்டருக்கு 400 மூங்கில் தூர்கள் ஒரு தூருக்கு ஆறு கழிகள் வீதம் 2,400 கழிகள் கிடைக்கும். மூங்கில் பயிரிட விரும்பும் விவசாயிகள் மூங்கில் சாகுபடி குறித்தும், அதன் ரகங்கள் குறித்தும், நோய் தடுப்பு முறைகள் குறித்தும் தா.பேட்டை தோட்டக்கலை அலுவலகத்தில் வேளாண் அலுவலர்களை நேரில் சந்திந்து விளக்கம் கேட்டு தெரிந்துக்கொண்டு பயன்பெறலாம்.

**விளை பொருளுக்கு உரிய விலை கேட்டு முசிறியில் விவசாயிகள் சங்கம் ஆர்ப்பாட்டம்**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 06,2011,01:51 IST

முசிறி: விவசாய விளை பொருள்களுக்கு கட்டுப்படியான விலை கேட்டும், மழை வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட பயிர்களுக்கு உடன் நிவாரணம் வழங்கிட கோரியும் முசிறியில் தமிழ்நாடு

விவசாயிகள் சங்கத்தின் சார்பில் ஆர்ப்பாட்டம் நடத்தினர். ஒன்றிய செயலாளர்கள் முருகேசன், சத்தியமூர்த்தி, முத்துகுமார், குமார், நல்லுசாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாநில குழு உறுப்பினர் ராமநாதன் தலைமை வகித்தார். மாவட்ட செயலாளர் மாசிலாமணி, மாவட்ட குழு உறுப்பினர் சுப்பிரமணியன், மாவட்ட துணை செயலாளர் வீரவிஜயன், லியோ ராஜா ஆகியோர் கோரிக்கைகள் குறித்துப் பேசினர். உரம், பூச்சி மருந்து மானிய விலையில் விவசாயிகளுக்கு குறித்த காலத்தில் தரமானதாக வழங்கிடவும், மாவு பூச்சியால் பாதிக்கப்பட்ட மரவள்ளிக்கிழங்கு விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்கிடவும், முசிறி, தொட்டியம், தா.பேட்டை, துறையூர், உப்பிலியபுரம் ஒன்றியங்களில் நெல் கொள்முதல் நிலையம் அமைத்திடவும், வலியுறுத்திப் பேசினர். விவசாயிகள் சங்கத்தினர் உட்பட பலர் திரளாக பங்கேற்றனர்.

**விதை கிராமத்திட்டத்தில் பயிற்சி முகாம் 170 விவசாயிக்கு இடுபொருள் வழங்கல்**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 06,2011,02:00 IST

கரூர்: தாந்தோணி வட்டாரத்தில், வெள்ளியணை பகவதி அம்மன் கோவில் திடலில் எண்ணெய் வித்து பயிருக்கான விதை கிராமத் திட்ட பயிற்சி நடந்தது.
கரூர் மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் ஜெகதீசன் தலைமை வகித்து பேசியதாவது: விதையே விவசாயத்துக்கு தொடக்கம். நல்ல தரமுள்ள விதை மட்டுமே 15 முதல் 20 சதவீதம் உற்பத்தியை அதிகரிக்கும். 2025ம் ஆண்டு நம் நாட்டில் 1.4 கோடி மக்களின் உணவு தேவைக்காக விவசாய உற்பத்தியை அதிகரிக்க வேண்டும். இதுமட்டுமின்றி விவசாயிகள் அதிக திறன் உள்ள மேம்படுத்தப்பட்ட விதை ரகங்களை உற்பத்தி செய்வது முக்கியமானதாகும்.

விதை கிராமத் திட்டத்தின் நோக்கமானது, ஒரு குறிப்பிட்ட கிராமங்களில் பயிற்சியளிக்கப்பட்ட விவசாயிகள் உற்பத்தி செய்த பயிர் விதைகளை தங்கள் தேவைக்கும் தங்கள் கிராமங்களில் உள்ள விவசாயிகளுக்கும் மற்றும் அடுத்த கிராமத்தில் உள்ள விவசாயிகளுக்கும் குறிப்பிட்ட நேரத்தில் தகுந்த விலையில் விதைகளை பரிமாறிக் கொள்வதாகும். விதைகளை ஒரே இடத்தில் உற்பத்தி செய்யலாம். விதை உற்பத்தியை அதிகரித்து, உள்ளூர் தேவைக்கு தகுந்த நேரத்தில் விதை விநியோகம் செய்யலாம்.

அனைத்து பண்ணைகளிலும் உரிய நேரத்தில் சந்தை விலையை விட குறைவான விலையில் விதை கிடைக்கும். விற்பனையாளர் மற்றும் நுகர்வோர் சமமாக பயனடைந்துள்ளனர். புதிய வகையான ரகங்களை அனைவருக்கும் உடனடியாக கிடைக்கும். இதனை கருத்தில் கொண்டு விதை உற்பத்தி தொழில்நுட்பத்தை கற்பிக்க கிராமங்களில் விவசாயிக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. இவ்வாறு அவர் பேசினார். கிருஷ்ணராயபுரம் எம்.எல்.ஏ., காமராஜ் பங்கேற்று பயிற்சியை துவக்கி வைத்து, 170 விவசாயிகளுக்கு பல்வேறு திட்டத்தின் வேளாண்

இடுபொருள் வழங்கினார். தாந்தோணி யூனியன் துணை தலைவர் ரகுநாதன், மூக்கணாங்குறிச்சி பஞ்சாயத்து ஒன்றிய தலைவர் சிவசாமி ஆகியோர் பேசினர். வெள்ளியணை கவுன்சிலர்கள் ராஜேஷ், செந்தில்குமார் விவசாயிகள் தேவைகுறித்து பேசினர். தாந்தோணி வட்டார உதவி இயக்குனர் (பொ) கவிதா வரவேற்றார்.

**புதுகையில் விவசாயிகள் சங்க மாவட்ட செயற்குழு கூட்டம்**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 06,2011,02:04 IST

புதுக்கோட்டை: புதுக்கோட்டையில் தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் மாவட்ட செயற்குழு கூட்டம் நடந்தது. மாவட்டத் தலைவர் செபஸ்தியான் தலைமை வகித்தார். மாநில துணைச் செயலாளர் சுந்தரமூர்த்தி, மாவட்டச் செயலாளர் பொன்னுசாமி, துணைத் தலைவர்கள் கருப்பையா, ராமசாமி உட்பட சங்க நிர்வாகிகள் பலர் கலந்துகொண்டனர்.
புதுக்கோட்டை மாவட்டத்தில் பெய்த கன மழையாலும், புகையான் நோய் தாக்குதலாலும் ஆயிரக்கணக்கான ஹெக்டேர் நிலங்களில் சாகுபடி செய்யப்பட்டிருந்த நெற்பயிர்கள் சேதமடைந்துள்ளது. இதை நேரில் சென்று அதிகாரிகள் ஆய்வு செய்து மாதங்கள் பல கடந்தும் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இதுவரை நிவாரண உதவி வழங்கவில்லை. அவர்கள் மீண்டும் சாகுபடி செய்ய வசதியாக காலதாமதமின்றி நிவாரண உதவி வழங்கவேண்டும். இந்திரா நினைவு குடியிருப்புகள் மற்றும் தொகுப்பு வீடுகள் சீரமைப்பு திட்டத்தின் கீழ் விண்ணப்பிக்க இம்மாதம் 10ம் தேதி வரை காலக்கெடு விதிக்கப்பட்டுள்ளது. இதை 28ம் தேதிவரை நீட்டிக்கவேண்டும் உட்பட மாவட்ட நிர்வாகத்தை வலியுறுத்தி பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

**மூலிகை தோட்டம் துவக்க விழா**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 06,2011,02:09 IST

தஞ்சாவூர்: தஞ்சாவூர் அரசர் மேல்நிலைப்பள்ளியில் அரசின் சுற்றுச்சூழல் துறை சார்பில் தேசிய பசுமைப்படை மாணவர்கள் அமைத்த மூலிகைத் தோட்டம் துவக்க விழா நடந்தது. தலைமையாசிரியர் பன்னீர்செல்வம் தலைமை வகித்தார். தேசிய பசுமைப்படை கல்வி மாவட்ட ஒருங்கிணைப்பாளர் ராம்மனோகர் மற்றும் மாவட்ட சுற்றுச்சூழல் ஒருங்கிணைப்பாளர் இளங்கோவன் ஆகியோர் மூலிகை செடிகளை நட்டு துவக்கி வைத்தனர். பள்ளி தேசியப்பசுமைப்படை ஒருங்கிணைப்பாளர் அண்ணாதுரை தேசியப்படை மாணவர்களை கொண்டு திட்டத்தினை உருவாக்கி சிறப்பாக செயல்படுத்தினார்.

**விவசாயிகளுக்கு ஆத்மா திட்டத்தின் கீழ் பயிற்சி**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 06,2011,02:01 IST

லாலாப்பேட்டை: கிருஷ்ணராயபுரம் கோரகுருத்தி கிராமத்தில் ஆத்மா திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு பயிற்சி நடந்தது. பயிற்சிக்கு கரூர் வேளாண்மை இயக்குனர் ஜெகதீசன் தலைமை வகித்தார். பசுமை துல்லிய பண்ணை திட்ட தலைவர் சுப்புராமன் வரவேற்றார். கிருஷ்ணராயபுரம் வேளாண்மை உதவி இயக்குனர் பாலகிருஷ்ணன் முன்னிலை வகித்தார். நெல்லை புதிய தொழில்நுட்ப முறையிலான ராசராசன் 1000 சாகுபடி முறையை கடைபிடித்து கூடுதல் மகசூல் பெறவும் வேளாண்மை துறை சார்பில் செயல்படுத்தும் திட்டங்கள், அதன் மூலம் கிடைக்கும் மான்யங்கள் குறித்து விவசாயிகளிடம் பேசினார். தரமான விதைகள் உற்பத்தி விதையின் தரம் அதன் பயன்கள் குறித்தும், தற்போது இருப்பில் உள்ள இடுபொருள் குறித்தும் விதை அலுவலர் ரத்தினவேல் விளக்கி பேசினார்.

நெல், எண்ணெய் வித்துக்கள் சாகுபடி தொழில்நுட்பம், ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறை பற்றியும் உதவி இயக்குனர் பாலகிருஷ்ணன் பேசினார். பயிற்சியில் 50க்கு மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர். முன்னோடி விவசாயிகளுக்கு வீரிய ஒட்டு சூரியகாந்தி விதைகள் இலவசமாக வழங்கப்பட்டது. விழா ஏற்பாடுகளை உதவி வேளாண்மை அலுவலர்கள் ஜெயலட்சுமி, சந்திரா ஆகியோர் செய்திருந்தனர்.

**இயற்கை உர விற்பனை விழிப்புணர்வு கருத்தரங்கு**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 06,2011,22:52 IST

கடலூர் : இயற்கை உர விற்பனை (பி.எஸ்.ஓ.6) விழிப்புணர்வு கருத்தரங்கு கடலூரில் நடந்தது. கூட்டுறவு சங்கங்களின் கடலூர் மண்டல இணைப் பதிவாளர் வெங்கடேசன் தலைமை தாங்கி இயற்கை உரம் பற்றிய கையேட்டினை வெளியிட்டு பேசினார். மத்திய கூட்டுறவு வங்கியின் இணைப் பதிவாளர் மிருணாளினி முன்னிலை வகித்து குத்து விளக்கேற்றினார். இணை இயக்குனர் இளங்கோவன் இயற்கை வேளாண்மை அவசியம் குறித்து பேசினார். தோட்டக்கலைத் துறை இணை இயக்குனர் கனகசபை, இணை பேராசிரியர் மகேஸ்வரி, தொழில் நுட்ப வல்லுனர் ராஜி, மத்திய கூட்டுறவு வங்கியின் பொது மேலாளர் பன்னீர்செல்வம், டான்பெட் மண்டல மேலாளர் ஜெயமணி உட்பட பலர் பேசினர். சிவப்பிரகாசம் நன்றி கூறினார்.

**விதை கிராம திட்ட பயிற்சி**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 06,2011,23:59 IST

ஊத்தங்கரை: ஊத்தங்கரை அடுத்த கானம்பட்டி கிராமத்தில் விதைக்கிராம திட்டத்தின் கீழ் சிறு தானிய பயிர்களுக்கான பயிற்சி நடந்தது.வேளாண் உதவி இயக்குனர் பெரியசாமி தலைமையில் நடந்த பயிற்சியில், விதை உற்பத்தி தொழில்நுட்பங்கள் பற்றியும், அமோக விளைச்சல் பெற வேண்டுமெனில் அதற்கு ஆதாரமாக தரமான விதைகள் உள்ளது. தரமான விதைகள் பயிரின் ஒவ்வொரு வளர்ச்சிப் பருவத்திலும் உகந்த தொழில்நுட்பங்களை கடைபிடிக்கப்பட வேண்டும். இவ்விதை தனது பராம்பரிய குணங்களிலிருந்து சிறிதும் குறையாமல் விதைவிதைத்தவுடன் நன்கு முளைத்து செழிப்பாகவும், சீராகவும் வளர்ந்து அதிக மகசூலுக்கு அடிப்டையாக அமைய வேண்டும். பயிற்சியில் வல்லுனர்விதை, ஆதாரவிதை, சான்று விதை பற்றியும் விளக்கமாக கூறினார். பயிற்சியில் ராகி விதைக்கு உயிர் உர விதை நேர்த்தி செயல் விளக்கம் செய்து காண்பிக்கப்பட்டது. துணை வேளாண் அலுவலர் சீனிவாசன், உதவி வேளாண்மை அலுவலர்கள் மாதையன், சிவக்குமார் உட்பட விவசாயிகள் பலர் கலந்து கொண்டனர்.

**பாம்பாறு அணையில் பாசனத்துக்கு நீர் திறப்பு**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 06,2011,02:27 IST

ஊத்தங்கரை: ஊத்தங்கரை அடுத்த பாம்பாறு அணையிலிருந்து பாசனத்துக்கு தண்ணீர் திறந்து விடப்பட்டது. பாம்பாறு அணையிலிருந்து ஊத்தங்கரை தாலுகாவில் 12 கிராமங்களும், அரூர் தாலுகாவில் 3 கிராமங்களும் சேர்த்து 1,499 ஏக்கர் பாசன வசதி பெறுகிறது. இப்பகுதி விவசாயிகள் பாசனத்துக்கு தண்ணீர் திறந்து விட வேண்டும் என கோரிக்கை வைத்தனர். நேற்று முன்தினம் பாசனக்கால்வாயை கலெக்டர் அருண்ராய் திறந்து வைத்தார். மாவட்ட பஞ்சாயத்து தலைவர் ராஜேந்திரன், யூனியன் சேர்மேன் ஆறுமுகம், தாசில்தார் தீர்த்தகிரி, பி.டி.ஓ.,க்கள் குணசேகரன், ஆஷா, செயற்பொறியாளர் சிங்காரவேல், பஞ்சாயத்து தலைவர்கள் ராஜமாணிக்கம், இந்திராகாந்திதேவேந்திரன், ராதாநாகராஜன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**காய்கறிகள் விலை கணிசமாக குறையும் : பிரதமரின் ஆலோசகர் உறுதி**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 06,2011,02:29 IST

கோவை : ""வரும் வாரத்தில் காய்கறிகள் விலை கணிசமாக குறையும்,'' என, பிரதமரின் பொருளாதார ஆலோசனைக்குழு தலைவர் ரங்கராஜன் தெரிவித்தார்.

கோவையில் ரங்கராஜன் நிருபர்களிடம் கூறியதாவது: அடுத்த வாரம் காய்கறிகளின் விலை கணிசமாக குறையும். மார்ச் 7ம் தேதிக்குள் பணவீக்கம் 7சதவீதாக குறையும். இதற்கான நடவடிக்கைகளில் அரசு ஈடுபட்டுள்ளது. பருத்தி உற்பத்தி அதிகரிப்பதே ஜவுளித்துறை பிரச்னைகளுக்கு தீர்வாக அமையும். பி.டி., பருத்தி பயன்படுத்துவதால் பருத்தி உற்பத்தி அதிகரித்துள்ளது. எனினும் பருவ மழை பொய்த்தால் பருத்தி உற்பத்தி நேரடியாக பாதிக்கப்படுகிறது.

சர்வதேச நாடுகள் இந்தியாவில் செய்யும் நேரடி முதலீடு தீவிரமாக கண்காணிக்கப்பட்டு வருகிறது. ஜவுளித்துறை வளர்ச்சிக்கு உதவும் வகையில் தொழில்நுட்ப மேம்பாடு நிதித் திட்டம் 1999ம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. மார்ச் 2012 வரை இத்திட்டம் நீட்டிக்கப்பட்டுள்ளது. ஜவுளித்துறையில் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய போட்டி மற்றும் தேவையை கருத்தில் கொண்டு நவீன மயமாக்கல், திறன் மேம்பாடு உள்பட பல்வேறு மேம்பாடு செயல்களில் இன்று முதல் ஜவுளித்துறை நிறுவனங்கள் ஈடுபட வேண்டும். பணவீக்கம் குறைவதற்கு தேவையான நடவடிக்கைகளில் மத்திய ரிசர்வ் வங்கி ஈடுபட்டு வருகிறது. இவ்வாறு, ரங்கராஜன் தெரிவித்தார்.

**காய்கறி விலை குறைவு: மக்கள் மகிழ்ச்சி**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 06,2011,02:24 IST

ஓசூர்: கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கடந்த இரு மாதமாக உச்சத்தில் இருந்த காய்கறிகள் விலை தற்போது குறைந்துள்ளதால், நடுத்தர மற்றும் ஏழை குடும்ப பெண்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். தமிழகத்தில் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் அதிகளவு காய்கறிகள் உற்பத்தி செய்யப்படுகிறது. மாவட்டத்தில் 10,773 ஹெக்டேரில் காய்கறிகள் சாகுபடி செய்யப்படுகிறது. குறிப்பாக தேன்கனிக்கோட்டை, ஓசூர் தாலுகாவில் 5, 300 ஹெக்டேரில் காய்கறிகள் உற்பத்தியாகிறது. இங்கு இருந்து அனைத்து வகை காய்கறிகளும், வடமாநிலங்களுக்கும், தமிழகத்தின் பிற மாவட்டங்களுக்கும் தினம் ஏற்றுமதியாகிறது.

மாவட்டத்தில் கடந்த மூன்று மாதங்களுக்கு முன் பெய்த கன மழை மற்றும் அதன் பின் வீசிய பணிக்காற்று, மூடுப்பணி ஆகிவற்றால் காய்கறிகள் உற்பத்தி 50 சதவீதம் பாதிக்கப்பட்டது. காய்கறி செடிகள் கருகி தரமான காய்கறிகள் சந்தைகளுக்கு வருவதும் குறைந்தது. இதனால், உள்ளூர் மற்றும் வெளியூர் மார்க்கெட்டுகளில் காய்கறிகளுக்கு கடும் தட்டுப்பாடு ஏற்பட்டு தமிழகம் முழுவதும் பரவலாக விலை உயர்ந்தது. அதிகப்பட்டசமாக தக்காளி கிலோ 45 ரூபாய் வரையும், முட்டைகோஸ் 30 ரூபாய், மிளகாய் 35 ரூபாய், கேரட் 35 ரூபாய், பீன்ஸ் 48 ரூபாய்,

வெங்காயம் 60 ரூபாய், கத்திரிக்காய் 33 ரூபாய், பாகற்காய் 36 ரூபாய் என காய்கறிகள் விலை உச்சத்தில் இருந்தது.

ஓசூர் உழுவர்சந்தையில் விவசாயிகள் கொண்டு வந்த காய்கறிகளை, வியாபாரிகள் ஒட்டுமொத்தமாக வாங்கி சென்றதால், பொதுமக்களுக்கு காய்கறி கிடைக்காமல் தட்டுப்பாடு ஏற்பட்டது. சில்லறை விற்பனை கடைகளில் அன்றாட மார்க்கெட் விலையைவிட 40 சதவீதம் கூடுதல் விலைக்கு விற்பனை செய்ததால், நடுத்தர, ஏழை குடும்பத்து பெண்கள் காய்கறிகள் வாங்கி சமையல் செய்ய முடியாமல் பாதிக்கப்பட்டனர். கடந்த இரு நாட்களாக ஓசூரில் காய்கறிகள் விலை வீழ்ச்சியடைய துவங்கி உள்ளன. அன்றாட சமையல்களில் முக்கிய பங்கு வகிக்கும் பெரிய வெங்காயம் கிலோ 22 ரூபாய், சின்ன வெங்காயம் கிலோ 30 ரூபாய், முட்டைகோஸ் 6 ரூபாய், பீன்ஸ் 12 ரூபாய், தக்காளி 8 ரூபாய், மிளகாய் 16 ரூபாய், கரட் 16 ரூபாய், பாகற்காய் 10 ரூபாய், காலிப்பிளவர் 6 ரூபாய், பீட்ரூட் 14 ரூபாய் என ஒட்டுமொத்த காய்கறிகள் விலையும் குறைந்துள்ளது. கடந்த மூன்று மாதமாக காய்கறிகள் விலையால் பாதிக்கப்பட்டு வந்த பொதுமக்கள், தற்போது உழவர்சந்தையில் மீண்டும் காய்கறிகள் வாங்குவதற்கு குவிந்து வருகின்றனர். தேங்காய் விலை மட்டும் குறையாமல் 8, 10 மற்றும் 15 ரூபாய் வரை விலை நீடிக்கிறது.

**நெல் அறுவடை வேளையில் வேளாண் துறை இயந்திரம் வீண்**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 06,2011,02:23 IST

சத்தியமங்கலம்: நெல் அறுவடை மும்முரமாக நடக்கும் வேளையில், வேளாண் துறைக்கு சொந்தமான நெல் அறுவடை இயந்திரம், பயனின்றி அனாதையாக நிற்கிறது. சத்தி, பவானிசாகர் பகுதியில் கீழ்பவானி பாசனம் மூலம், நடவு செய்யப்பட்ட நெற்பயிர், தற்போது நன்றாக விளைந்து அறுவடைக்கு தயாராக நிற்கிறது. பல பகுதிகளில் அறுவடை மும்முரமாக நடந்து வருகிறது. சத்தி பகுதியில் இருந்து மஞ்சள் அறுவடைக்காக கூலியாட்கள் கர்நாடகா செல்வதாலும், நூறு நாள் வேலைவாய்ப்பு திட்டம் மற்றும் நூற்பாலைக்கு இளைஞர்கள் சென்று விடுவதாலும், நெற்பயிர் அறுவடைக்கு ஆட்கள் இல்லாமல், விவசாயிகள் அவதிப்படுகின்றனர்.

அறுவடை இயந்திரம் பயன்படுத்த விவசாயிகள் தயாராக இருந்தாலும், இயந்திரம் வருகை குறைவாக உள்ளதால், பற்றாக்குறையாக உள்ளது. எந்திரம் மூலம் அறுவடை செய்ய கட்டணமாக மணிக்கு 1,200 ரூபாய் வசூலிக்கப்படுகிறது. அருகிலுள்ள கர்நாடகா மாநிலத்தில் நெற்பயிர் அறுவடை செய்ய, மணிக்கு 1,800 முதல் 2,000 ரூபாய் வரை வசூலிக்கப்படுகிறது. இதனால், பெரும்பான்மையான நெற்பயிர் அறுவடை இயந்திரங்கள் கர்நாடகா சென்றுவிட்டன.

வேளாண் துறை மூலம் நெற்பயிர் அறுவடை இயந்திரம் குறைந்த கட்டணத்தில் வாடகைக்கை தரப்படுகிறது. ஆனால், சத்தி வட்டார வேளாண் துறைக்கு சொந்தமாக அறுவடை எந்திரம் பழுதாகி, சத்தி - கோவை நெடுஞ்சாலையில் செண்பகப்புதூர் மாரனூர் அருகே சாலையோரமாக பல ஆண்டுகளாக நிறுத்தப்பட்டுள்ளது. நெற்பயிர் அறுவடை எந்திரத்தின் விலை 17 லட்சம் ரூபாய். இவ்வளவு விலை மதிப்புள்ள எந்திரத்தை எவ்வித பாதுகாப்புமின்றி, அனாதையாக நிற்க வைத்து, அந்த எந்திரத்தை கொஞ்சம் கொஞ்சமாக அழித்து வருகின்றனர்.

**விவசயிகளுக்குதீவன விதை வழங்கல்**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 06,2011,22:53 IST

உடுமலை:உடுமலை அருகே குறிச்சி கோட்டை கால்நடை மருந்தகத்தில், நீர், நிலவளத் திட்டத்தின் கீழ், விவசாயிகளுக்கு தீவன விதை வழங்கும் நிகழ்ச்சி நடந்தது.இரு நாட்களாக, பாசன சபைக்கு உட்பட்ட 300 விவசாயிகளுக்கு, 1,900 கிலோ ஆப்பிரிக்கன் நெட்டை மக்காச்சோள விதை வழங்கப்பட்டது. பாசன சபை தலைவர்கள் காளிமுத்து, வாசுதேவன், பழனிச்சாமி முன்னிலையில், கால்நடை மருந்தக டாக்டர். சாயிரா பானு, விவசாயிகளுக்கு வழங்கினார். கால்நடை மருந்தக பராமரிப்பு உதவியாளர்கள் பாலசுப்ரமணியம், பழனிச்சாமி உட்பட பலர் பங்கேற்றனர்.

**தேயிலை தோட்டங்களில் இயந்திர பயன்பாடு : "உபாசி' தோட்டத்தில் விவசாயிகளுக்கு பயிற்சி**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 06,2011,01:59 IST

குன்னூர் : தேயிலை தோட்டப் பணிக்கு, மானிய விலையில் இயந்திரங்களை வழங்கி, இயந்திரப் பயன்பாட்டை ஊக்குவிக்கிறது தேயிலை வாரியம்; தோட்டக்கலை துறையின் பயிற்சி வகுப்பில் பங்கேற்ற பெண்களுக்கு "உபாசி' தோட்டத்தில் செய்முறை விளக்கம் அளிக்கப்பட்டது.

தேசிய தோட்டக்கலை இயக்கத்தின் சார்பில், குன்னூர் தோட்டக்கலை துறை மூலம் விவசாயிகளுக்கு தோட்ட பயிர் சாகுபடி குறித்த ஐந்து நாள் பயிற்சி வகுப்பு, குன்னூரில் நடந்தது. கொய்மலர், காய்கறி சாகுபடி முறை குறித்து விரிவான பயிற்சி வழங்கப்பட்டது. தோட்டக்கலை துறை மூலம் விவசாயிகளுக்கு வழங்கப்படும் மானிய விலை விதைகள், சலுகைகள் குறித்து விளக்கப்பட்டது.

தொடர்ச்சியாக, உபாசி வேளாண் அறிவியல் நிலையத்தின் மூலம், "உபாசி' தேயிலை தோட்டத்தில், இயந்திரங்களை கொண்டு இலை பறித்தல், கவாத்து வெட்டுதல், சால் அமைத்தல் பயிற்சிகள் வழங்கப்பட்டன. "உபாசி' அதிகாரி ராமமூர்த்தி மேற்பார்வையில் நடந்த பயிற்சியில், கத்தரி, இயந்திரங்களின் மூலம் பசுந்தேயிலை பறிக்கும் முறை குறித்து விளக்கம் அளிக்கப்பட்டது. தவிர, தோட்டங்களின் இடையே இயந்திரத்தின் உதவியுடன் சால் அமைத்தல், தோட்ட மேற்பரப்பை சமன் செய்தல் பயிற்சிகளும் வழங்கப்பட்டன.

"படித்த வேலையற்ற இளைஞர்களுக்கு, இந்த இயந்திரங்கள் அனைத்தும் 50 சதவீத மானிய விலையில் வழங்கப்படுகின்றன; இதுவரை 20க்கும் மேற்பட்ட இளைஞர்களுக்கு மானிய விலையில் இயந்திரம் வழங்க தேர்வு செய்யப்பட்டுள்ளனர். இவர்களை பயன்படுத்தி, விவசாயிகள் தங்கள் தோட்டங்களில் இலை பறித்தல், கவாத்து வெட்டுதல் உட்பட பணிகளை செய்து கொள்ளலாம்,' என தெரிவிக்கப்பட்டது. பயிற்சியில் பங்கு பெற்ற பெண் விவசாயிகள் இயந்திரத்தின் மூலம் இலை பறித்து, பயிற்சி பெற்றனர்.

**அறுவடை செய்ய முடியாமல் விவசாயிகள் தவிப்பு**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 06,2011,22:58 IST

அலங்காநல்லூர் : பெரியாறு வாய்க்காலில் நீர் வரத்து இருப்பதால் அமோகமாக விளைந்த நெல்லை அறுவடை செய்யமுடியாமல் விவசாயிகள் தவிக்கின்றனர். இதையடுத்து வைகை அணையில் இருந்து பாசனத்திற்காக தண்ணீர் திறப்பு நேற்று காலை முதல் நிறுத்தப்பட்டது. பெரியாறு-வைகை பாசன வாய்க்காலில் பேரணை முதல் கள்ளந்திரி வரை வழக்கமாக ஜூன் மாத இறுதியில் தண்ணீர் திறக்கப்படும். இதே நாளில் இரண்டாவது போக சாகுபடி அறுவடையும் முடிந்திருக்கும். இந்த ஆண்டு பருவமழை மாற்றம் காரணமாக ஒரு போக சாகுபடி மட்டுமே செய்ய முடிந்தது. புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட ராஜராஜன் ஆயிரம் நெல் சாகுபடி இந்த ஆண்டு விவசாயிகளுக்கு நல்ல பலனை தந்துள்ளது. அறுவடை செய்ய வேண்டிய காலத்தில் தொடர்ந்து பெரியாறு வாய்க்காலில் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. நிலத்தில் ஈரப்பதம் இருப்பதால் நிலத்திற்குள் அறுவடை மிஷன் இறக்கமுடியவில்லை.

கை அறுவடை செய்ய ஆட்கள் கிடைப்பதும் இல்லை. கால்நடைகளுக்கு வைக்கோல் தேவைப்படும் என்பதால் சிலர் மட்டுமே கை அறுவடை செய்கின்றனர். மேலூர், அலங்காநல்லூர் உட்பட பாசன பகுதிகளில் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலத்தில் அமோக விளைச்சல் கண்டுள்ள நெல் அறுவடை செய்ய, தண்ணீர் திறந்து விடுவதை நிறுத்த வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர். மேலூர் விவசாயிகள் தண்ணீரை நிறுத்தாவிட்டால் மறியலில்

ஈடுபடப்போவதாக எச்சரித்தனர். இதையடுத்து நேற்று வைகை அணையில் இருந்து பாசனத்திற்காக தண்ணீர் திறப்பு நிறுத்தப்பட்டது. மதுரை நகர் குடிநீருக்காக மட்டும் தினமும் 60 கனஅடி தண்ணீர் அளிக்கப்படுகிறது.

**"ராஜராஜன் 1000' சாகுபடி இலக்கை எட்டியது**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 06,2011,01:25 IST

மதுரை : ""மதுரையில் ராஜராஜன் 1000 நெல் சாகுபடி நிர்ணயிக்கப்பட்ட இலக்கை எட்டியுள்ளது," என, கலெக்டர் காமராஜ் தெரிவித்தார். மதுரை மாவட்டம் சேக்கிப்பட்டியில் ராஜராஜன் 1000 அறுவடை வயல் விழா கலெக்டர் தலைமையில் நடந்தது. அவர் கூறியதாவது: மதுரையில் சராசரியாக 60 ஆயிரம் எக்டேர் பரப்பில் நெல் சாகுபடி நடக்கிறது. இந்தாண்டு 57 ஆயிரத்து 440 எக்டேர் பரப்பில் நெல் சாகுபடி செய்யப்பட்டது. இதில், ராஜராஜன் 1000 நெல் 26 ஆயிரம் எக்டேர் பரப்பில் சாகுபடி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டு முழு அளவில் சாகுபடி நடந்துள்ளது. சேக்கிப்பட்டியில் நீர்வடிப்பகுதி அபிவிருத்தி பணிகள் 2005-06 முதல் நடக்கிறது. இதுவரை 480 ஏக்கர் பரப்பளவு பயனடைந்துள்ளது. இந்திய வேளாண் வளர்ச்சி அறக்கட்டளை எனும் தன்னார்வ தொண்டு நிறுவனம் மூலம் பயன்பெறவுள்ள, விவசாயிகளால் கிராம நீர்வடிப்பகுதிக்குழு அமைக்கப்பட்டு, 1,000 எக்டேர் பரப்பளவு தரிசு மற்றும் மானாவாரி நிலங்கள் மேம்படுத்தப்படவுள்ளன. இவ்வாறு கூறினார்.

**பூமிக்கு "காய்ச்சல்**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 06,2011,01:28 IST

மதுரை : ""வெப்பமடைதல் பாதிப்பினால் பூமிக்கு காய்ச்சல் ஏற்படுகிறது," என மதுரை சேதுபதி மேல்நிலை பள்ளியில் நடந்த புவி வெப்பமடைதல் பற்றிய விழிப்புணர்வு கருத்தரங்கில், தெரிவிக்கப்பட்டுள்ளது. மத்திய தகவல் ஒலிபரப்பு அமைச்சக கள விளம்பர அலுவலர் சந்திரமோகன் வரவேற்றார். சமூக காடுகள் கோட்ட வன அலுவலர் செண்பகமூர்த்தி பேசியதாவது: நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயத்திற்கு சேதாரம் செய்யாதீர்கள். இவற்றிற்கு நன்மை செய்வது வனம். பூமியை அதிகம் சேதமடையச் செய்வது மனிதன்தான். நமது உடலின் சராசரி வெப்பநிலை 98.4 டிகிரி. இது 101 டிகிரியாக உயரும் போது, காய்ச்சல் மற்றும் நோய்களால் நமது உடல்நிலை பாதிக்கப்படுகிறது. இதேநிலைதான் பூமிக்கும் ஏற்பட்டுள்ளது என்றார். ராமராஜ் பேசியதாவது: ஸ்டாக்ஹோமில் 1972 ல் நடந்த மாநாட்டின் விளைவாக, இந்தியாவில் 1974 ல் நீர் மாசு தடுப்பு கட்டுப்பாட்டுச் சட்டம், பின் காற்று மாசு தடுப்புச் சட்டம்,

1986 ல் சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சட்டம் இயற்றப்பட்டது. ஜூன் 5 உலக சுற்றுச்சூழல் தினம், டிச.,2 மாசு தடுப்பு தினம் கொண்டாடப்படுகிறது.

நமது வளர்ச்சி நீடித்ததாக இருக்க வேண்டும். தொழிற்சாலை கழிவுகள் அதிகம் வெளியேறுகின்றன. ஏ.சி.,பிரிட்ஜிலிருந்து வெளியேறும் "குளோரோபுளோரோ' கார்பன் வாயு, பூமியின் மேற்பரப்பிலுள்ள ஓசோன் மண்டலத்தை பாதிக்கிறது. இந்தியாவில் 70 சதவீத மின்சாரம் நிலக்கரியில் உற்பத்தியாகிறது. இவற்றிலிருந்து கார்பன்டை ஆக்சைடு அதிகம் வெளியேறுகிறது. இதை உட்கிரகிக்க மரங்கள் அதிகம் நட வேண்டும். முன்பு சராசரி வெப்பநிலை உயர்வு 1 டிகிரியாக இருந்தது. 21 ம் நூற்றாண்டில் 6 டிகிரி உயர்ந்துள்ளது.

ஒரு டிகிரி உயர்வால், கடல் மட்ட உயரம் 3 அடி உயரும். சுற்றுச்சூழலுக்கு பாதிப்பு ஏற்படுத்தாத தொழிற்சாலைகள் தேவை. டூவீலர் பயன்பாட்டை தவிர்த்து, சைக்கிள் ஓட்ட வேண்டும். எத்தனை சட்டங்கள் போட்டாலும் மக்கள் பங்களிப்பு அவசியம் என்றார். தலைமை ஆசிரியர் கோபாலன், கள விளம்பர உதவி அலுவலர் வேல்முருகன் பங்கேற்றனர்.

**சிவகாசியில் நெல்அறுவடை மும்முரம் கோடை சாகுபடிக்கு ஆலோசனை**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 06,2011,22:41 IST

சிவகாசி : சிவகாசி தாலுகாவில் நெல் அறுவடை மும்முரமாகியுள்ளது. கோடை சாகுபடிக்கு மானிய விலையில் இடுபொருட்கள் வழங்கப்படுகிறது. சிவகாசி தாலுகாவில் கடந்த ஆண்டு பருவமழை தாமதமாக பெய்ததால், அக்டோபரில் நெல் நடவு செய்தனர். புதுக்கோட்டை, செவலூர், சித்தமநாயக்கன்பட்டி, எரிச்சநத்தம், வடபட்டி, தச்சகுடி உள்ளிட்ட பகுதிகளில் 1149 எக்டேரில் நெல் சாகுபடி செய்யப்பட்டது. தற்போது அறுவடை மும்முரமாக நடந்து வருகிறது. எக்டேருக்கு 8 முதல் 9 டன் மகசூல் கிடைக்கிறது.

அறுவடைக்கு பின் கோடை சாகுபடி செய்யலாம். பிப்ரவரியில் நிலங்களை பன்படுத்தி பயறு வகைகள், மக்காச்சோளம், எண்ணெய் வித்து பயிர்கள், கடலை, பருத்தி சாகுபடி செய்யலாம். தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் சிவகாசி தாலுகாவிற்கு 12 டன், தேசிய உணவு பாதுகாப்பு திட்டத்தில் 3.50 டன், எண்ணெய் வித்து திட்டத்தின் கீழ் 4 டன் உள்பட 19.50 டன் ஜிப்சம் இருப்பு உள்ளது. இதை 50 சதவீத மானியத்தில் எக்டேருக்கு 750 ரூபாய் மானிய விலையில் பெற்றுக்கொள்ளலாம். எண்ணெய் வித்து பயிர்களுக்கு எக்டேருக்கு 400 கிலோ வீதமும், பயறு வகை பயிர்களுக்கு எக்டேருக்கு 110 கிலோ ஜிப்சம் இடவேண்டும். விதை கிராம திட்டத்தில் பயறு வகைகள் 4 டன் இருப்பு உள்ளது. ஒரு கிலோவிற்கு 30 ரூபாய் மானியம்

வழங்கப்படும். எஸ்.வி.பி.ஆர்., பருத்தி விதை கிலோ 66 ரூபாய்க்கு வழங்கப்படும். 952 கிலோ இருப்பு உள்ளது. பி.டி.கே. உயிரி பூச்சி மருந்து, எம்.பி.வி., வைரஸ் பூச்சி மருத்துகள் 50 சதவீத மானியத்தில் வழங்கப்படும். தேவைப்படும் விவசாயிகள், சிவகாசி வேளாண் அலுவலகத்தை அணுகி விதை மற்றும் இடுபொருட்களை பெறலாம்.

**இருக்கன்குடி அணையில் இருந்து நேரடி பாசனத்திற்கு தண்ணீர் திறப்பு**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 06,2011,22:40 IST

சாத்தூர் : சாத்தூர் அருகே இருக்கன்குடி அணையில் இருந்து மார்ச் மாதம் 16 தேதி வரை நேரடி பாசனத்திற்கு தண்ணீர் திறந்து விடப்படுகிறது. இருக்கன்குடி அணையில் இருந்து நேரடியாக எட்டாயிரம் எக்டர் நிலம் பாசன வசதி பெறுகிறது. நாகலாபுரம் கண்மாய், மேலமடை பெரியகண்மாய் உள்பட மூன்று பாசன கண்மாய்கள் நேரடியாக பாசன வசதி பெறுகிறது. கடந்த பிப்.1., முதல் 5 தேதி வரை அணையில் இருந்து தண்ணீர் திறந்து விட கலெக்டர் சண்முகம் உத்திரவிட்டு இருந்தார். இதனை நீட்டிக்க வேண்டும் என விவசாயிகள் அதிகாரிகளை வலியுறுத்தினர். இதன் படி தற்போது மார்ச் மாதம் 16 தேதி வரை நேரடி பாசனத்திற்கு தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. நாள் தோறும் 25 கன அடி தண்ணீர் பாசனத்திற்காக வழங்கப்படுகிறது. அணையில் தற்போது 199 மில்லியன் கன அடி தண்ணீர் இருப்பு உள்ளது.

**வாழை இலை தட்டுப்பாடு திருமண சீஸனில் விலை உயர்வு**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 06,2011,02:20 IST

ஈரோடு: தமிழகத்தில் பனிப்பொழிவு அதிகமாக இருப்பதால், வாழையிலை விளைச்சல் கடுமையாக பாதிக்கப்பட்டு வரத்து குறைந்துள்ளது. திருமணம், சுபகாரியங்கள், வீட்டு விசேஷங்கள் போன்ற பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு வாழை இலை அவசியம் தேவை. ஹோட்டல்களிலும் வாழையிலை அதிகமாக தேவைப்படுகிறது. நடப்பாண்டு தை மாதம் ஆரம்பத்தில் இருந்தே கடும் பனிப்பொழிவு இருந்து வருகிறது. மரத்திலேயே வாழையிலை உடைந்து விடுவதால், இலை வரத்து வெகுவாக குறைந்துள்ளது. கேரளா மாநிலங்களில் இருந்தும், தமிழகத்தில் பல்வேறு ஊர்களில் இருந்தும் வியாபாரிகள் மொத்தமாக வாழை இலையை வாங்கி வந்து, ஈரோட்டில் விற்பனை செய்கின்றனர். திருமண சீஸன் துவங்கியுள்ளாதால், ஒரு ரூபாய்கு விற்கப்பட்ட வாழை இலை, இரண்டு ரூபாயாக விலை உயர்ந்துள்ளது.

ஈரோடு நேதாஜி மார்க்கெட் வாழையிலை வியாபாரி ஜானகி கூறியதாவது: கேரளா, பழனி, தேனி, ஈரோடு லக்காபுரம் மற்றும் பகுதியில் இருந்து, வாழை இலை ஈரோடு மார்க்கெட்டுக்கு வருகிறது. ஈரோட்டில் மட்டும் 100க்கும் மேற்பட்ட வாழை இலை வியாபாரிகள் உள்ளனர். தலைவாழை இலை ஒரு ரூபாயில் இருந்து இரண்டு ரூபாயாகவும், தடுக்கு இலை ஒரு ரூபாயில் இருந்து 1.50 ரூபாய், டிஃபன் இலை 50 பைசாவுக்கும் மார்க்கெட்டில் விற்பனை செய்கின்றனர்.காலத்துக்கு ஏற்ப காகிதம், பிளாஸ்டிக் மற்றும் பாக்கு மட்டை தட்டுகளும், எவர்சில்வர் தட்டுகளும் இப்போது, வந்து விட்டன. இதனால், வாழை இலை வாங்குவோர் எண்ணிக்கை நாளுக்குநாள் குறைந்து கொண்டே வருகிறது. இவ்வாறு அவர் கூறினார்.

**_ஜனவரி மாதத்தில் சோயா புண்ணாக்கு ஏற்றுமதி இரண்டு மடங்கு அதிகரிப்பு_**



*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு*

*புதுடெல்லி*

*நடப்பு ஆண்டு ஜனவரி மாதத்தில் சோயா புண்ணாக்கு ஏற்றுமதி 2 மடங்கிற்கும் மேல் அதிகரித்து 5.76 லட்சம் டன்னாக உயர்ந்துள்ளது. இது, சென்ற ஆண்டு ஜனவரி மாதத்தில் 2.74 லட்சம் டன்னாக இருந்தது.*

*சர்வதேச அளவில் சோயா புண்ணாக்கிற்கான தேவை அதிகரித்து வருவது மற்றும் உள்நாட்டு சந்தைகளில் சோயாபீன்ஸ் தாராளமாக கிடைப்பது போன்றவையே ஏற்றுமதி அதிகரிப்புக்கு முக்கிய காரணங்களாகும்.*

*இது குறித்து இந்திய சோயாபீன் பதப்படுத்துதல் கூட்டமைப்பின் செய்தி தொடர்பாளர்*

*மற்றும் ஒருங்கிணைப்பாளர் ராஜேஷ் அகர்வால் கூறும்போது, "இதர நாடுகளுடன் ஒப்பிடும்போது, நம் நாட்டிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் சோயா புண்ணாக்கின் விலை குறைவாக உள்ளது. இதனையடுத்து, சர்வதேச சந்தைகளில் இவற்றின் விற்பனை அதிகரித்துள்ளது" என்று தெரிவித்தார்.*

**மீன்களை ஆர்வத்துடன் ரசிக்கும் சிறுவன்**



சர்வதேச நன்னீர் இறால் மற்றும் அலங்கார மீன்கள் வளர்ப்பு கண்காட்சி சென்னை நந்தம்பாக்கம் டிரேடு சென்டரில் நடந்து வருகிறது. இக்கண்காட்சியில் வைக்கப்பட்டுள்ள மீன் தொட்டியில் நீந்திச்செல்லும் மீன்களை ஒரு சிறுவன் ஆர்வத்துடன் பார்த்து ரசிக்கும் காட்சி.

மாலை மலர் BETA

**நாளை முதல் ஸ்டிரைக் தொடங்குகிறது: சென்னைக்கு பால் தட்டுப்பாடு அபாயம்**

Chennai ஞாயிற்றுக்கிழமை, பெப்ரவரி 06, 11:50 AM IST



சென்னை, பிப். 6-

தமிழ்நாடு முழுவதும் 8 ஆயிரம் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கம் மூலம் பால் கொள்முதல் செய்யப்பட்டு ஆவின் நிறுவனத்துக்கு வருகிறது. இதில் சென்னைக்கு மட்டும் தினமும் 10 1/2 லட்சம் லிட்டர் பால் வருகிறது. பால் கொள்முதல் விலையை உயர்த்தி தரக்கோரி பால் உற்பத்தியாளர்கள் கோரிக்கை வைத்திருந்தனர்.

சமீபத்தில் அரசும் பால் கொள்முதல் விலையை உயர்த்தி கொடுத்தது. ஆனால் இது போதாது என்று பால் உற்பத்தியாளர்கள் நாளை முதல் "ஸ்டிரைக்" நடத்துகிறார்கள்.

இதுகுறித்து பால் உற்பத்தியாளர்கள் நல சங்க மாநில தலைவர் செங்கோட்டுவேல் கூறியதாவது:-

தற்போது பசும் பாலுக்கு லிட்டருக்கு 15 ரூபாய் 50 காசு தருகிறார்கள். இதை மேலும் 5 ரூபாய் உயர்த்தி கேட்டோம். எருமை பாலுக்கு ரு. 23-ல் இருந்து ரூ. 31 ஆக உயர்த்தி கேட்டோம். எங்களை பேச்சு வார்த்தைக்கு அழைத்த போது பசும் பாலுக்கு ரூ. 2.50ம், எருமை பாலுக்கு ரூ. 4-ம் தருவதாக கூறினார்கள். ஊழியர்கள் சம்பளத்துக்கு 30 பைசா தருவதாக கூறினர்.ஆனால் அவர்களாகவே திடீரென பசும் பாலுக்கு ரூ. 1.10ம், எருமை பாலுக்கு ரூ. 2.20 அதிகரித்து தருவதாக அறிவிப்பு வெளியிட்டு விட்டனர். இது எங்களுக்கு பெருத்த ஏமாற்றமாக உள்ளது. அதனால் நாளை முதல் "ஸ்டிரைக்" நடத்துகிறோம்.

ஸ்டிரைக்கின் போது பாலை வீணாக்க கூடாது என்பதால் கால்நடைகளுக்கு கலப்பு தீவனம் கொடுப்பதை நிறுத்தி விட்டோம். சிறிதளவு கறக்க கூடிய பாலையும் கூட்டுறவு சங்கத்திற்கு கொண்டு செல்லாமல் பாலை தயிராக்கி-மோர் எடுத்து மீண்டும் மாட்டுக்கே கொடுத்து விடுவோம். எங்கள் போராட்டத்தால் சென்னைக்கு நாளை மட்டும் பாதிப்பு அதிகம் இருக்காது. நாளை மறுநாளில் இருந்து கண்டிப்பாக பால் தட்டுப்பாடு உருவாகும். கிராமத்தில் உள்ளவர்கள் யாரும் சொசைட்டிக்கு பால் ஊற்ற வர மாட்டார்கள்.

இவ்வாறு அவர் கூறினார்.

இதே போல் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் நல சங்க மாநில இணை செயலாளர் வாசு என்கிற ராமகிருஷ்ணன் கூறியதாவது:-

சேலம் மாவட்டம் ஆத்தூர் சுற்று வட்டார பகுதியில் இருந்து தான் சென்னைக்கு அதிகளவில் பால் அனுப்பப்படுகிறது. ஆத்தூர், தலைவாசல், கெங்கவல்லி பகுதிகளில் ஒரு நாளைக்கு 1 லட்சத்து 30 ஆயிரம் லிட்டர் பால் கொள்முதல் செய்யப்பட்டு டேங்கர் லாரிகளில் சென்னைக்கு கொண்டு செல்லப்படுகிறது. சங்ககிரி, ராசிபுரம், பரமத்திவேலூர், மேட்டூர், இடைப்பாடி ஆகிய பகுதிகளில் இருந்து 3 லட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்யப்படுகிறது.

தமிழ் நாட்டிலேயே பால் உற்பத்தி இங்கு தான் அதிகம். தனியார் பால் கம்பெனிகள் பாலுக்கு அதிக விலை கொடுத்து வாங்குகிறார்கள். ஆனாலும் எங்களுக்கு குறைந்த விலைத்தான் தருகிறார்கள். கர்நாடகாவில் ரூ. 2-ம், கேரளாவில் ரூ. 2 1/2-ம், புதுவையில் ரூ. 3-ம் மானியம் வழங்கப்படுகிறது. ஆனால் இங்கு பாலுக்கு மானியம் வழங்கப்படுவதில்லை. எனவே இந்த கோரிக்கைகளை வலியுறுத்தி நாளை முதல் கால வரையற்ற ஸ்டிரைக்கில் ஈடுபட உள்ளோம்.

எனவே நாளை முதல் பாலை சொசைட்டுகளுக்கு கொடுக்க மாட்டோம். தயிர், மோர் போட்டு கொடுப்போம், உறுப்பினர்கள் யாரும் பால் தரவில்லை என்றால் சென்னையில் பால் தட்டுப்பாடு ஏற்படும். இது தவிர நாளை கறவை மாடுகளுடன் சாலை மறியலும் செய்வோம். எங்கள் போராட்டத்துக்கு மிரட்டல்கள் வருகிறது. அதை பொருட்படுத்தாமல் போராடுவோம்.

இவ்வாறு அவர் கூறினார்.

இதுபற்றி ஆவின் அதிகாரி ஒருவரிடம் கேட்டபோது, அரசு இப்போதுதான் பால் கொள்முதல் விலையை உயர்த்தி கொடுத்துள்ளது. எனவே இவர்கள் போராட்டம் தேவையற்றது. சென்னைக்கு பால் தட்டுப்பாடு வராத அளவுக்கு தேவையான முன் ஏற்பாடு நடவடிக்கைகளை எடுத்துள்ளோம். எனவே மக்களுக்கு பால் தட்டுப்பாடின்றி கிடைக்க அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளது என்றார்.